ப்ரஹ்மவித்யா.

௩-ம் புத்தகம்

பத்திராகிரயம்
1 ௵ 2—12—0
6 ௴ 1—8—0
3 ௴ 0—14—0
1 காபி - 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

௮-ம் இலக்கம்

பத்திராகிரயத்தைமணியார்டராக வரவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாசவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்குஅனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௮௵ அக்டோபர்௴ ௧௫௳ சர்வதாரி௵ புரட்டாசி௴ ௩௰

ப்ரஹ்மவித்யா.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்
(தொடர்பு)

ஐயா,

அவ்வாருசி மாமுனிவர் தென்னாட்டில் தேஜினிவந க்ஷேத்திரமெனவழங்கும் திருவீழிமிழலையில் பிறந்தவரென்று ஊகிக்கப்படுகிறது. அஃதெங்ஙனமெனில்- தென்னாட்டின்கண்ணுள்ள தஞ்சாவூர் ஜில்லாவில் "ஹரிச்சுருதை,, என்னும் அரசலாற்றின்கரையில் மேற்கண்டபெயருள்ள ஓர்ஸ்தலமிருக்கின்றது. அத்தலபுராணத்தில் அங்கு வசித்திருந்த கதர் என்னும் அருந்தவச்செல்வர், எமதிருக்கட்பிரானது முதற்சக்தியாய அம்பிகையவதரித்து காத்தியாயனியென்றதிருநாமம் பெற்றாளென்றும், அவ்வம்மைசகோதரரே "காத்தியாயனர்,, எனப்பதம்பெற்ற மாமுனிவரென்றும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றது. அதுகொண்டே இத்தேசத்திற்சிலர் இவ்வாருசிமாமுனிவரை ஸ்ரீமத்கண்ணனுடைய திருவவதாரமென்றுஞ் சொல்லுகிறார்கள். ஸ்ரீமத் பார்வதிதேவியாருடன் பிறந்தவன் அச்சுதனென்று சிலபுராணங்களிற்காணப்பட்டதே இதற்குமூலமாயிருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயம். அவ்வபாக்கியானத்தால அவர்பிறந்தது தென்னாடென்று வெளியாகிறது. இனி இக்கருத்தாற்றான் அவர் திருவாய்மலர்ந்தருளிய வார்த்திகத்திற்குப் பாடியம் வகுத்தருளிய ஸ்ரீபதஞ்சலிமாமுனிவர் மாபாடியத்தின்தொடக்கத்தில் [பாயிரத்தில்] 'யதாலௌகிகவைதிகேஷு' "யதாலௌகிகவைதிகேஷு,, என்றவார்த்திகத்தி

[illegible]

ற்குறை விரிக்குமிடம் "ப்ரியதத்திதாஹிதாக்ஷிணாத்யா:" "பிரியதத்திதாஹிதாக்ஷிணுகயா" என்ருர். [இதன்பொருள் "தென்னட்டிற் பிறந்தவார்த்திகச் சொற்களைப் பெரும்பான்மையாய் உபயோகிப்பது வழக்கம்" என்பது] ஆதலால் இம்முனிவர் தென்னட்டிற் பிறந்தவரென்பது வெளியாயிற்று. ஆயினும் அவர் பிறந்தவிடம் இன்னதென்று துணியாய்க் கூறிஞரில்லை. அது இதுதான் என்பதற்கு இப்புராணமன்றி வேறெப்புராணமேனும் எக்கதையேனும் இடந்தந்ததில்லை. இவ்விஷயத்தில் பிருகத்கதா என்னும புஸ்தகமும் "கதாசரித்ஸாகரம்" என்பதும் ஓர்வகைக் கதையைச் சொல்லுகின்றது; "தென்னட்டில் [அதாவது அவ்விடம் சொல்லியிருக்கிற முன்பின்வசனங்களைத் திரட்டியாலோசித்தால் உஜ்ஜயினீ பட்டணத்தின் அருகாமையில் இவர் இருந்திருக்கவேண்டியதாய் ஏற்படுகிறது"] ஓர்பிராமணகுமாரன் இருந்தான் என்றும், அவனுக்குத் தகப்பனிட்டபெயர் வாருசி என்றும், கதமாமுனிவர் கோத்திரத்தில் பிறந்தவராகையால் காத்தியாயனர் எனவும், பெயர்கள் உண்டென்றும், அவர் ஒருதடவைகேட்டசங்கதியை மற்றெப்பொழுதும் மறவார் என்றும், ஆதலால் அவருக்கு "ஶ்ருததர:" "சுருததரர் கேட்டதைமறவாதவர்" என்னும் பெயரும் வழங்கிவந்ததாகவும் ஏற்படுகிறது. அக்காலத்தில் வடநாடுகளில் பிரசித்திபெற்று விளங்கின "குணாட்டியர்" என்கிற ஓர் பண்டிதமணி தமக்கு "ஓர்தடவை சொன்னதை மறவாதகுணமுள்ள சீடன் ஒருவன் வேண்டும் என்று தேடிக்கொண்டு தென்னட்டில் சஞ்சரித்ததாகவும், அவ்விடத்தில் இக்குழந்தையைக்கண்டு அழைத்துக்கொண்டுபோய் சர்வ வேதங்கள் சாஸ்திரங்கள் இவைகளைச் சொல்லிவைத்தாரென்றும், அவரிடம் படித்து இவர் மகாவித்துவானயினர் என்றிருக்க, அக்காலத்தில் 'பாணினி' என்பவர் எழுதிய வியாகரணசாஸ்திரத்துக்கு மாறாக இக்குணாட்டியர் ஸ்ரீமுருகேசனது திருவருளால் "காதந்திரம்" கலாபகம் என வழங்கிவரும் வியாகரணத்தைசெய்தருளினர்" என்றும ஓர்காலத்தில் 'பாணினி முனிவர்க்கும் இக்குணாட்டியர்க்கும் நேர்ந்த விவாதத்தில் பாணினிமுனிவர் வெற்றிபெற இக்குணாட்டியர் அப்பாணினீயவியாகரணத்தை ஒப்பியதுமன்றி, அவ்விதம் ஆரம்பத்தில் செய்த பிரதிஞ்ஞைப் பிரகாரம் "ஸம்கிருதம் பிராகிருதம் தேசபாஷை" இம்மூன்று பாஷைகளையும் விட்டார் என்றும், அவர் அதன்பிறகு பைசாசீ என்கிற பாஷையைக் கைக்கொண்டு அதனல் தனக்கின்றியமையாத விவகாரங்களை நடத்திவந்தார் என்றும், அதேபாஷையில் அவர் தான்அறிந்தவிஷயங்களை அடக்கி பிருகத்கதை என்கிற ஓர் கிரந்தத்தை பைசாசீ பாஷையில் எழுதிவைத்தார் என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. அக்காலத்திற்றனே "வருஷர்" என்றும உபவருஷர் என்றும் இரு சகோதரர்களிருந்தார்கள். இவ்விருவருள் இளையவர் சீடரே பாணினி என்பவர். அவ்வுபவருஷரோ அப்பாணினியார் எடுத்துரைக்கருளிய "சத்தப்பிரமவாத சித்தாந்தத்துக்கு" மாறுகோளான சித்தாந்தமாகிய சாங்கியசாஸ்திரத்தைக் கைக்கொண்டவர். அதுகொண்டே பஞ்சுஷை என்கிற கிரந்தத்தில் "நாகேசபட்டாசாரியர்" என்பவர் இவ்வுபவருஷரை சாங்கியரென்ருர். ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளும் பாணினியார் கோட்

[illegible]

பாட்டுக்கு விரோதி, உபவருஷாசாரியார் என்றார். [அதாவது பாணினி கூறியபடி பரை, பச்சியந்தி, மத்திமை, வைகரி இவைகளுள் பரை மூலகாரணமென்பது உண்மையல்லவென்றும் எழுத்துக்களே அனாதிகளென்றும் அவரது கொள்கை. இனி விரிக்கிற்பெருகும்; நிற்க; இவ்வாருசிமா முனிவர் காலத்திலிந்தேசத்தில்ஐந்துபாஷைகள் இருந்ததாகப்புலப்படுகிறது. அவை ஸம்ஸ்கிருதம், பிராகிருதம், தேசபாஷை, பைசாசீ என்கிற நான்குடன் யவனபாஷையும் சேர்ந்து ஐந்தாயிற்று. ஆதலாற்றான் வாருசியார், பாணினியார் எழுதிய "இந்திரவருண,, என்னுஞ்சூத்திரத்திற்கு விருத்தியுரையிடுமிடத்து, "யவநால்லிப்யாம்" என்றுயவனவெழுத்திற்கு "யவனானி,, என்பெயர் என்று இலக்கணங்கூறினர். அதுகொண்டே அக்காலத்திலபாஷைகள் ஐந்தென்றோம். சிலர் தேசபாஷை என்பதால் அநேகபாஷைகளைக் கொள்ளலாமென்றுரைக்கின்றார்கள். எமக்கும் அவ்விஷயத்திற் பிடிவாதமில்லை. ஆயினுந் தக்கபிரமாணமில்லாமையால் உத்தேசமாத்திரத்தால் சாலவுமொப்புவதுமட்டில் அசாத்தியமாயிருக்கிறது. இம்முனிவரோ அப்பாணினி முனிவரியற்றிய வியாகரணத்திற்கு முதலுரையாசிரியர். இவரே அப்பாணினி முனிவரினுட்கருத்துகளை நன்கெடுத்து விளக்கினார். பாணினி முனிவர் சூத்திரங்களைச்சுருக்கி விஷயங்களையடக்கிவந்தனர். அச்சூத்திரங்களின் பொருள்கள் அவரிருக்குங்காலத்தில் அவரிடம் நேரேபடித்தவரும் அவ்வழிமாறாதறிந்தவரும் அறிவாரேயன்றி மற்றவர் அறிவது அருமையேயன்றி வேறல்ல. பிறகு இவ் வார்த்திகமொன்றெழுதப்படாவிடில் அப்பாணினி முனிவரினுட்கருத்தையறிவது கடினமாகவேயிருக்கும். பாணினி, காத்தியாயனர் இவர்கள்காலம் சமானமென்று பலர் எண்ணுகிறார்கள். ஆயினும் எமக்கு அங்ஙனம்புலப்படவில்லை. என்னை? பாணினி சூத்திரமெழுதியகாலத்தில் சமஸ்கிருதபாஷை தேசபாஷையாயிருந்ததாகத் தெரியவருகிறது. அவ்விஷயத்திற்கு வேண்டியகாரணங்கள் முன்னரேகாட்டப்பட்டிருக்கின்றன. வார்த்திக காலத்திலே அநேகபாஷைகளிருந்தனவென்றும், சம்ஸ்கிருதம் தேசபாஷையாகவிருக்கவில்லையென்றும்வெளியாகிறது. இவ்விரண்டற்கும் நடுவிலநேக நூற்றாண்டுகள் இருந்திருக்கவேண்டுமென்பதே எமது கருத்து. எங்ஙனமெனில், ஓரிடத்தில் ஓர்பாஷை தேசபாஷையாயில்லாது சிலதினங்களிலாவது சிலவருஷங்களிலாவது ஒழியாது பற்பலவருஷங்களிருந்தாலல்லது அவை மாற இடமிராது. தசப்பன் காலத்திலிருந்த தேசபாஷை பின்னைகாலத்திலே வேறானதாக எங்கும் கேட்டோமில்லை; கண்டோமில்லை. இனி இவ்விரு ஆசிரியர்களுக்குமமத்தியகாலம் இவ்வளவென்பதைப் பண்டிதர்களே அறிவார்களாக. இனிப்பாணினி ஸம்ஸ்கிருத பாஷைக்கே இலக்கணம் எழுவந்தாராகலின் அவர் மற்றபாஷைகளைப்பற்றி சிறிதும் எழுதினாரில்லை. அவ்வளவுபெரிய கிரந்தத்தில் முற்றிலும் மற்றபாஷைகளின் தன்மை எட்டாமைக்குஇதுத் தக்ககாரணம் எங்ஙனம்? இதுவும்நிற்க; இவ்வாருசிமாமுனிவர் இன்னும்பலபுத்தகங்களை எழுதினார். அவற்றுள் முக்கியமானது "பிராஜங்கள்,, என்கிற சுலோகங்கள். இனி சிலபண்டிதர்கள் பிராகிருதப்பிரகாசம் என்கிற பிராகிருதபாஷையின் இலக்கணமும், கணிதங்களில்சிலபுஸ்தகங்களும் மற்றுஞ்சில காவ்யங்

[illegible]

[illegible]

களும். இவ்வாருசி மாமுனி எழுதினர் என்கிருர்கள். அது மட்டில் மயக்கமே. ஏனெனில், விக்கிரமார்க்க மகாராஜாவின் மூத்தசகோதரரான வாருசி என்பவர் அம்மன்னவர் சபையின்கண் காளிதாசன்முதலிய கவிகளுடன் கூடியிருந்து இப்புஸ்தகங்களை எழுதினர்; என்பது "விக்கிரமபுண்ணியபத்திரத்திலும், "பதஞ்சலிவிஜய காவியத்திலும்,, காணப்படுகின்றது. ஆகையால் இவர் வேறே வாருசி; அதன்றி; இத்தேசத்தில் பெயர்போன வித்துவான்களுள் இரண்டு வாருசிகள். ஒருவர் வியாகரணத்துக்கு வார்த்திகம் எழுதியவர்; மற்றவர் கணிதத்தையும் சில காவியங்களையும் பிராகிருதப்பிரகாசம் இவைகளையும் எழுதினவர். இவற்றுள் முன்வாருசி எழுதிய வார்த்திகம் முழுமையும் மாபாடியததில் பொருள்படுத்தப்பட்டிருக்கின்றது. அவைகளில் சிலயாப்பிலமைந்து செய்யுட்களாய் நின்றன; சிலவசனங்கள் சிலசூத்திரத்தில் விசாரணைவழிபொருளுரைக்கின்றன. சில நேரே பதவுரையாயிருக்கின்றன. இவைகளை "சர்ச்சாவார்திகங்கள் சித்தாந்தவார்த்திகங்கள்,, என முறையேவழக்குவது. இங்ஙனமிருக்க, மாபாடியத்துக்கு உரை யெழுதிய "கையிடனர் ,, [[illegible]] என்னும் சூத்திரத்தின்பாடியத்திற் குரையாடுமிடத்துச் செய்யுள்வார்த்திகங்கள்செய்தவர் வாருசியினும் வேறொருவர் என்று குறித்தார். இஃது பெருமயக்கம். ஏன் எனில், மாபாடியத்தில் முற்றிலும்செய்யுளோ வெனின்வசனமேவார்திகங்களையும் உரைசெயயுமிடத்துவாருசியாரோ அவ்வார்த்திகாசாரியரென்று சாதித்திருக்கின்றதனலெங்க வேறு எங்கும், எப்பிரமாணத்திலும் வியாகரணவார்த்திகம் எழுதினவர்கள் இருவர்களென்று சொல்லவில்லை. இம்மட்டில்தான் வாருசியாரின் சரித்திரம். அவர் கிரந்தங்கள் இவைகளின் வரலாற்றின் சுருக்கம்; அக்காலத்திலும் சம்ஸ்கிருத பாஷைக்குலிபியில்லை; அதைப்பற்றி இலக்கணம் சிறிதுமில்லை; யவனர் பாஷைக்கு மட்டில் லிபி யிருந்ததாய் வார்த்திகக்காரர் எடுத்தோதினர். மற்றது மற்றொரிடத்துவரும்.

கடவுள்.

ஐய, கவனியுங்கள்!!

யாம் பலபத்திரிகைகளில் புத்தியின் சுவரூபத்தைப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும், சரீரத்தைப்பற்றியும் எடுத்துப்பகரித்தோமல்லவா? அவ்வுபந்நியாசங்களில் மனமென்பது மூளையினும் வேறுபொருளென்றும், அம்மனத்தினுதன் ஆன்மாவென்றும், அவனுக்கு மறுபிறப்புண்டென்றும் வரைந்தோம். முதலில் மனமித்தன்மைத்தென அறிந்தவுடன் அம்மனம் எவ்வண்பாலடங்கியது? எனவாசங்கை நிகழின், அதையகற்றுவாம் அவ்வான்மா சரீரமா? அல்லது சரீரத்தின் வேறு? இதற்கு எளிதில் சரீரத்தின் வேறுபொருளென்றுரைத்தோம். அச்சரீரத்தின் வேறான ஆன்மா சரீரத்தை எங்ஙனம் பெற்றான் எனில், "மறுபிறப்பென்று மகுடஞ்சார்த்தி அவ்விடயத்தை எடு

[illegible]

௧. கிம் ஜகத்?

௨. கிமிதம் கார்யம்?

௩. கார்யம் சேத் காரணம் கிம்?

௪. தத்கிம் ந காலः?

௫. தத்கிம் ந ஸ்வபாவः?

௬. தத்கிம் ந நியதிः?

௭. தத்கிம் ந யத்ருச்சா?

௮. தத்கிம் ந பூதாநி?

௯. ஸ கிம் புருஷः?

௰. [illegible]

௧௧. [illegible]

௧௨. [illegible]

௧௩. [illegible]

௧௪. [illegible]

௧௫. [illegible]

௧௬. [illegible]

௧௭. [illegible]

௧௮. [illegible]

த்துக்காட்டினேம். ஆங்காங்கு நாத்திகர் கேள்விகளின் வேரைக் களைந்தோம். அவைகளை எழுதுமிடத்து அடிக்கடி கடவுள், கன்மம், யோகம் இவைகளைப்பற்றியும் விளக்கினோம். ஆகலால், அப்பொருளுண்மையுடன் விளக்கக்காட்டுதலே எனக்கருதி அவ்விடயத்தை நீளநினைந்தெழுத இறங்கேந்தினேம். இவ்விடயத்தில் விரோதிகள், நாத்திகர்களும் மதப்பக்கிகளுமே. இவர்க்கு அவர்களாக்கைகளைப் பின்வருமாறு எடுத்துக்கொள்வாம்.

௧. ஜகமென்பது யாது?

௨. அதுகாரியமா?

௩. காரியமாயின் காரணம் யாது?

௪. அக்காரணம் காலமாகாதோ?

௫. அஃதியற்கையாகாதோ?

௬. அதுவிதியாகாதோ?

௭. அது தற்செயலாகாதோ?

௮. அது பஞ்சபூதங்களாகாதோ?

௯. அதுஜீவனாகாதோ?

௰. இச்சகம் காரியமாயின் ஏன் சரீரத்தால் உண்டாகவில்லை?

௰௧. கடவுள் உண்டென்பதற்குப்பதிலாக அப்பெருமையை அணுக்களுக்கீந்தாலாகாதோ?

௰௨. இனி அணுக்கள் பாகபேதத்தால் ஏன்பலவித உலகப்பொருளாகக்கூடாது?

௰௩. முற்றிலும் புலன்களுக்குப்புறம்பான அப்பொருளை ஒப்புவதில் முக்கியமானகாரணம் யாது?

௰௪. இயற்கையாற்றோன்றினவும், சேற்கையாற்றோன்றினவும் வேற்றுமைப்பட்டனவோ?

௰௫. ஜீவன் உலகாம் சத்தை உண்டாக்கயாம் காண்டலால் ஏன் உலகம் அநேகரால் சிருட்டிக்கப்படாது?

௰௬. கடவுளிருப்பின் ஏன் தாரதம்மிய சிருடிசெய்கிறான்?

௰௭. இனி ஜடங்களும் நித்தமும், ஜீவனும் நித்தமும், கடவுளும் நித்தமுமென்றால் இவைகளுக்கு வேற்றுமையாது?

௰௮. உலகத்தில்ஜீவர்கள் அநாதியாய் முத்திபெற்று, மீண்டும் பிறப்பாரில்லையென்பது உண்மையுமாயின், ஒரு சமயம் எல்லோருமுக்தியடைய மறுசிருட்டி இல்லாமற்போமோ?

௰௭. மறுசிருஷ்டியில்லையாயின் இதுகாறும் ஏன் பிரபஞ்சம் நிலைபெற்றது?

௨௰. இனி கடவுளிலக்கணம் என்ன?

௨௧. அவருக்கு ரூபம் ஒன்றா?

௨௨. அல்லது பல ரூபங்களா?

௨௩. அல்லது ரூபங்களே இல்லையா?

௨௪. அவர் அறிவிடம் என்பது யாதுபற்றி?

௨௫. அவரையறிதலால் யாம் அடையும் பயன் யாது?

இவற்றுள் முதற்கேள்வியை எடுத்தாராய்வாம். "ஜகம் என்பது யாது? இதுவே முதற்கேள்வி. இதன் கருத்திது; உ

௨௰. [illegible]

௨௧. [illegible]

௨௨. [illegible]

௨௩. [illegible]

௨௪. [illegible]

௨௫. [illegible]

இதி [illegible]

லகத்தில் யாம் கண்கூடாகக்காணும் பொருள்களெல்லாம் பூதங்களின் றிரிபாகவே பார்க்கிறோமன்றி வேறாய் ஒன்றையேனும் கண்டோமில்லை. மனம் முதலிய வத்துக்களும் பூதங்களின் றிரிபே. அங்ஙனமே ஆத்திகர் ஒப்பிய பிரமாணமான "சாந்தோக்கிய" உபநிடதமும் சொல்லுகின்றது. "[illegible]" "மனம் அன்னத்தின் திரிபு" என்பது அச்சுருதிவாக்கியம் ஆதலால் யாம் காணக்கூடிய வஸ்துக்களெல்லாம் பூதங்களின் திரிபே. ஆதலாற்றி ஜகம் என்பது பூதத்திரிபெனப்பொருள்படும். ஜீவன் என்கிற வஸ்துவும் பூததிரிபாய்த்தான் தோற்றுகின்றது. அது வேறாய் அனாதியில் இருந்தாலும் இருக்கக்கூடும்; இனி ஜடங்களும் ஜீவர்களுமே, "ஜகம்" என்பதாக முடிந்தாகள். ஆகையான் இவ்வத்துக்களுக்குக் காரணங்களான பூதங்கள், பூதசாரங்கள் இவை நேரே யாம்காணக்கூடியவைகள். அவைகளினும் வேறாய ஓர்பரம்பொருள் வேண்டுவது அவசியமில்லை என்பதே. இதற்குச் சமாதானம். ஐயா, பௌதிகமான வஸ்துகள் பூதங்களின் திரிபென்பதுஎமக்கும் உடன்பாடே. யாமோ பௌதிகங்களை (பூதகாரியங்களை) மட்டில் உலகம் என்றோமில்லை. ஜீவனுங் கலந்திருக்கின்றான். அச்சீவன் யாம் காணும் பூதங்களின் விகாரமல்லவென்றும், அவன் நித்தியனென்றும், அவன் பற்பல பூதவிகார சரீரங்களை எடுத்துக்கொள்ளுவான் என்றும், அவன் பரம்பொருளின் கருணையால் திடமான நிலைமையைப் பெறுவான் என்றும், பற்பல காரணங்களால் விளக்கினோமல்லவா? இனி ஜடம ஜீவன் இதுகளே "ஜகம்" என்பதாயின், இவ்விஷயத்தில அறியவேண்டியது இது. நித்திய வத்துக்களாயுள்ள ஜடஜீவர்களுக்கும் அடிக்கடி மாறுபாடு ஏற்படுவதை யாம் பார்க்கலாம். ஆதலால் உண்டாவது எதுவோ, அதுவே "ஜகம்" ("ஜ" என்பது வடமொழிப்பகுதி; உண்டாதல் அதன் பொருள்) எது நசிக்குமோ அது "கம்" (க - என்பது வடமொழிப்பகுதி; நசித்தல் என்பது அதன்பொருள்) "ஜம்", "கம்"; இரண்டும் சேர்ந்தது ஜகம்; ஆகையால், உண்டாதல், அழிதல் என்கிற இருவகை வேற்றுமையைப்பெறும்பொருள் அல்லது அவ்வேற்றுமைகளே ஜகம் எனப்படுவன. அதில் உண்டாதல் என்பது காரணத்தில் சூக்குமமாய் இருந்தபொருள் அதினின்று மற்றவர் அறியும்படிக்காரிய வடிவம் எய்தல். அவ்விதம் அழிதல் என்பதும் கண்முதலிய புலன்களுக்கு அகப்படுந்தன்மை ஒழிந்து வேற்றுமைப்படுதல். இனி முன்புலப்படாது புலப்படின் அஃதுண்டாயிற்று. முன் புலப்பட்டு பிறகு புலப்படாவிடின் அஃதழிந்தது. வித்துநித்தியமாதலால் எங்கும் முன்னில்லாத ஓர் பொருள் எங்கும் பிறப்பதுமில்லை அழிவதுமில்லை. உண்டாதல் என்றால், அதவத்துவின்கண் தோன்றும் அமைப்புகளுக்கே; அவைகளுக்கே அழிவும் எனக்கொள்க. முடிந்தபடி "ஜகம்" என்பது சேருதல், பிரிதல் இவை அல்லது இவைகளின் இடமே. இங்ஙனமாயின், ஜீவஜடங்களுள் ஒன்றுடனொன்று சேருதலும் ஒன்றுடனொன்று சேர்ந்திருந்து பிரிதலும் தன்னியற்கையா லமையாதுபற்றி, சேர்ந்தவைகளைப்பிரிக்கவும், பிரிந்தவைகளைச் சேர்க்கவும் சேர்தல் பிரிதல் என்னும் இரண்டையும் பெறும் பொருளினும் வேறாய் ஓர் பொருள் இருக்கவேண்டும். ஒரிடத்

[illegible]

தில் ஒன்றுடனென்றவேற்றுமைபெற்ற இருவகைக்காரியங்களை உண்டாக்கும் தொழில்கள் அமைந்திருக்கின்றன என்பது யுக்திவிருத்தமா? இனி ஜடமும் ஜீவனும் சேருவதாகக்காரணம், ஜீவனது விருப்பம் என்பதும் கூடாது. அவன் தான் வெகுகாலமாய் அபிமானித்த சரீரத்தையும் வியாதி முதலியவைகளால் துன்பமுற்றும், விடாமலிருக்க முயன்றும் முடியாமல் விடுகிறானல்லவா? இவ்விஷயத்தில் அதிகம் பின்வரும். ஆதலால் இவ்விடம் ஓர் அதிட்டாதா நிச்சயமாய் ஏற்படுவான்.

இனி இரண்டாம் விஷயத்தைக் கவனிப்பாம். "இஃது காரியமா?,, என்பதிரண்டாம் விஷயம்; அதன்கருத்தும் இதுவே. உலகத்தில் ஜகத்தின் அம்சங்களான "குடம்,, முதலியவை உண்டாக யாம் கண்டோம். அழிபவும் கண்டதுண்டு. இவ்வுலகமெல்லாம் காரியமாய் தொழில்படக்கண்டவர் ஒருவருமில்லையாதலால், உலகத்தின் அம்சங்கள் காரியங்களாயினும் உலகம் காரியமேயல்ல. அஃதுகாரியமாயின் அது பெரியகாரணத்தைக்கொண்டே முடியும். இனி உலகாம்சங்களுக்கும் காரணம்தேடவேண்டுவதில்லை. யாமங்கேனும் எந்தப்பொருள் உண்டாகக் காண்போமோ, அங்கே அதின் கருத்தாவனசேதனனையும் காண்போம். யாம்காணக்கூடிய காரியங்களான குடம் படம் முதலியவற்றிற்குக் கர்த்தா, யாம் காணக்கூடா நிலைமையைப்பெற்றவனுயிருப்பதாய்க் கேட்டதும் கண்டதும் அனுமானித்தும் கூடவில்லையே. இவ்வுலகில் ஓர்குடத்தைக்கண்டவிடம் தொழில்படுசேதின கர்த்தா புலப்படாவிடம் இக்குடத்தை கடவுளமைத்தார் என்று தர்க்கநூலைக்கற்ற எவனேனும் சொல்லுவானே! பாருங்கள் எங்கேனும் ஒருகாட்டிற்சென்று அங்கோடிவரும் ஓர் நதியின் அருவியில் ஓர் சிறிய தங்கஆபரணத்தைக்கண்டெடுத்தால், அதையெடுத்தவன் இதை எவனோ ஒருசிற்பிசெய்தான் என்றும், அஃதிங்கே வந்தவழி தெரியவில்லையென்றும் நினைப்பானேயன்றி இது கடவுளால் செய்யப்பட்டதெனத் துணிவானே! ஆதலால் யாம் எதை காரியமாக அறிவோமோ அங்கே காரணமுங்கூடவே அறியப்படுகின்றது. உலகம் எல்லாம் காரியமாகக் கண்டதுமில்லை; அங்கு காரணமுமில்லை. இனி சர்வவல்லமை பெற்றவன் எல்லாவற்றையும் படைக்கவல்லவனேல், ஜீவர்கள் செய்துவரும் குடமுதலியவற்றையும் ஓரிடம் சிருஷ்டிக்கலாமே! நாங்கேட்ட கதைகளிலும் "ஜீவனால் தொழிற்படுத்தப்படுந்தன்மையுள்ள வஸ்துக்கள் கண்ணிற்குப்புறம்பான பரம்பொருளாலமைந்தது ,,என்பதில்லையே. இனிஉலகம் இருவிதம். அதாவது: காரியம், நித்தியம்; இவற்றுள் காரிய வுலகத்திற்கு ஜீவன்களேகாரணம். நித்திய உலகத்திற்குக் காரணமேஇல்லை. அதுவே சர்வகாரணம். ஆதலால், ஜகத்தில் ஜீவனிலும் வேறான காரணப்பொருள் ஒன்றுண்டெனச்சித்திப்பதரிதே என்பது.

இதை இவ்விதமறுக்க; ஐய! நீவிரும் உலகத்தில் சிறிதுகாரியம் என்றெற்பீரோ! அங்கு அதன்கர்த்தா இல்லாப்பொருளை உண்டாகினன்; அல்லது உள்ள அமைப்பைமாற்றினன்; அவன் ஒன்றையும் புதிதாய் உண்டாக்கவில்லை; உள்ள மண்முதலியவற்றையே வேறுவிதமமையச்செய்தான்; அதன் மாத்திரையில் அதுகாரியமாயின் அங்கு காரியத்தன்மை, சில அவயவங்களை

[illegible]

ச்சேர்த்தலும்பிரித்தலுமேயல்லவா? எங்ஙனமெனின், முன்னிருந்த மண்ணுண்டையின் நடுவில் இருந்தவைகளை வெளிக்கிளைந்து பிரித்து, வெளியில்வளைவு குவிவு முதலிய அமைப்புகளை உண்டாக்கினன். இனிக்காரியம்இத்தன்மைத்தாயின் அக்காரியத்தன்மை அவயவமுள்ள வத்துக்களில் அமையுமன்றி வேறில்லை. ஆதலாற்றான "அவயவமுள்ளதுகாரியம்,, என்று ஆன்றோர் கொள்கை. உலகத்திலும் யாம் அவயவமுள்ளவைகளாகக்காணும் குடமுதலியவற்றில் காரியமாகுந்தன்மையைக் கண்டேவருகிறோம். எங்கு காரியமென்றெண்ணுகிறோமோ அங்கு அவயவங்களுள்ளதாயும அறிகிறோம். இங்ஙனம் உலகாம்சகாரியமாயின் அவ்விதம் காரியத்தன்மைபெற்ற பல அம்சங்கள் நிறைந்த உலகம் காரியமென்றே ஏற்படும். உலகத்தில் குடத்தின் ஓர்பக்கம் காரியமும்,பிறிதொருப்க்கம் நித்தியமுமென்று சித்திக்குமோ? அங்ஙனமாயின் உலகத்தினம்சங்கள்சில காரியமும் சிலநித்தியமுமென்றேற்படும். ஆதலால், முன்னில்லாது புலப்படும் ஒவ்வொருபொருளும் காரியமென்பதேதுணிபு. "உலகமெல்லாம் காரியப்படக்கண்டவனில்லை,, என்றோமேயெனில், ஐயா!! உலகத்தில் எப்பொருளையும் முற்றிலும் அறிந்தவன் ஒருவனுமில்லை. "யாம் தேவதத்தனைத் தொட்டோம்,, எனில், அவனை முற்றிலுந்தொடவில்லை. ஆனால் அனுபவத்திலே தொட்டோமென்றே கொள்கை. "பாதிதேவதத்தனைத்தொட்டோம்; பாதிதேவதத்தனைத் தொடவில்லை,, என்று அனுபவிப்பதில்லை. எக்காலமும் எவ்விதம் முயன்றாலும் உள்ளும் புறம்பும் ஒருவனைப் பரிசிக்க முடியாதென்பது திண்ணம். இனி அவ்விடத்தில் "தேவதத்தன் தொடக்கூடியவன் தொடக்கூடாதவன்,, இருவகைப்பட்டவன் என்று பகுக்கக்கூடுமாயின் உலகாம்சம் காரியமாய்ப் பிரத்தியக்ஷமாதலால், மற்றது நித்தியமும் சிலபாகம் காரியமுமாம். நிற்க; யாம்சில மரம் செடி கொடிகள் முளைக்கக்காண்கின்றோம். அங்குயாம் காணக்கூடிய கர்த்தாவும் இல்லை. அது நித்தியமுமல்ல; அநித்திய காரியமான அவ்வத்து அங்குண்டாவதற்குக் காரணம் யாது? உலகத்தில் புற்பூண்டுகளையும் சிருஷ்டித்த ஜீவனைக்காண்பதரிது; இனி நீர் சொல்லவேண்டியதுயாது? எனில், "உலகத்தில் நித்தியம், மண் மலை முதலியன. கடம், படம் முதலியன ஜீவகாரியம். மரம் செடி கொடி முதலியன இயற்கையால் அமையுங் காரியங்கள்,, என்பதே. அங்ஙனமாயின் உலகத்தில் நித்தியம், ஜீவகாரியம், இயற்கைகாரியம என மூன்று அம்சங்கள் ஏற்பட்டால், உலகம் மூன்று பகுபாடுகள்உள்ள பொருளாயிற்று. அங்ஙனமாயின் அவ்வம்சங்களும் சேர்க்கை, பிரிதல் உண்டாமென்பது சொல்லாதமையும். இனி அதே உண்டாதலும் போதலு மாதலால், உலகம் காரியமென்றே ஏற்பட்டது. அதுகொண்டே சிவபுராணத்தில் "ஜகச்ச கர்த்ருஸாபேக்ஷம் கார்யம் ஸாவயவம் யத:,, ஜகச்ச கருத்ருஸாபேக்ஷம் காரியம் ஸாவயவம்யத:, உலகம் கருத்தாவை அவாவும் காரியமாதலால் அதுகாரியம் அவயவங்களுள்ளதாதலால்,, என்றிருக்கின்றது. இனி மற்றவை மற்றோரிடம் வரும்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கடிதங்கள்

கடிதங்களின் பிரபத்திரகுப் பத்திராதிபர் பாத்தியரல்லர்

கடிதர்கட்கு

☞ கடிதம் எழுதுவோர் [...]யான் காகிதத்தின் ஒரோரடக்கத்தில் நல்லமைகொண்டு சுத்த[மா]பமாகவும், [...]கள் ஒன்றோடொன்று புணராமலும் எழுதவேண்டும்.

நங் கடிதர்களுள் சிலருக்குப் பன்முறை அறிவித்தும் கவனிக்காததைப் பற்றி விசனிக்கிறோம்.

விக்கிரகாராதனம் வைதிகமென்பது.

(முன் தொடர்பு)

ஐயன்மீர்! அரணிக்கட்டையில் கடைவதென்னுந் தொழிலால் அக்கினி வெளிவருவதுபோல, கண்டிறப்பது பஞ்சகவ்யாபிஷேகம். தண்ணீர் முதலியவற்றில் அதிவாஸம் (அதாவது ஊறும்படி சிறிதுகாலம் வைத்தல்) முதலிய செய்கைகளால் சுத்திசெய்து பூர்ணசக்தி நிறைந்த பிம்பத்தின்கண் அப்பரம்பொருளின் பெருங்கருணை வெள்ளம் வெளியாகும் என்பதிற் றடையில்லை. அவ்வக்கினியில் ஹோமஞ்செய்வதுபோல் அப்பிம்பத்தில் பூஜையும், அவ்வக்கினியின்கண் நித்தியஞ்செய்யும் ஹோமம்போல் இப்பிம்பத்தின்கண் நித்தியபூஜையும் அவ்வக்கினியின்கண் பருவகாலத்தில் செய்யும் இஷ்டியாகங்கள்போல மஹோற்சவமும், அங்கு வருஷயாகம்போல் இங்கும் பிரமோற்சவங்களுஞ் செய்யப்படுகின்றன. இனி அவ்வக்கினியில நித்தியம் செய்துவருந் ஹோமம் முதலியவற்றால் அவ்வக்கினி பிரகாசிப்பதுபோல், நித்தியாராதனத்தால் பிம்பத்தில் [ப]ரமாத்மசக்தி விளங்கும். அக்கினிக்குச் சமித்[து] முதலி[யன இல்லா]விடில் அவ்வக்கினி அணைவதுபோல நித்தியபூஜைகள் குன்றிவிட்டது பிம்பங்களில் அப்பெருஞ்செல்வம் குறையும் என்பதுண்மை. அவ்விதம் ஓரிடம் பரமாத்மாவுக்கு ஆவிர்ப்பாவம் குறைவுபடினும் அவருக்குக் குறைவு யாதுமில்லை. இனி யாம் செய்யும் அபிஷேகத்தால் அவ்வத்துவுக்குச் சுத்தியாவதுமில்லை. யாம் அளிக்கும் புஷ்பமுதலியவற்றால் அவருக்குப் புதியவாசனை உண்டாவதுமில்லை. யாம் அளிக்கும் நைவேத்தியத்தால் அவருக்குப் பசியுண்டாயிருந்து ஒழிந்ததுமில்லை. அவர் என்றும் குறைவற்றவர்; நித்தியசுத்தர்; யாண்டும் திருத்திபெற்றவர். ஆயினும் அவருக்கு எம்மிடம் கருணைவெள்ளம் பெருக வேண்டி, யாம் இவை செய்வதேயன்றி வேறில்லை. எமக்கு அப்பரமன் அளித்த சரீரம் முற்றிலும் அவனுக்கே தொண்டு புரியக் கடமைப்பட்டதாதலால் அதை முற்றிலும் கடவுளின் கைங்கரியத்தைச் செய்யும்படிவிட இவ்விக்கிரகாராதன மின்றி வேறுவழியில்லை. கவனியுங்கள்!! கால்கள் அவரது கோயில் வலஞ்சூழவும், நேத்திரங்கள் அவரது திருவுருவைக் கண்டுகளிக்கவும், கைகள் திருமேனியைத் தீண்ட[வு]ம், நாசி அச்சுக்

[illegible]

தத்தை முகாவும், நாவு அவனைத் துதிசெய்யவும், செவிகள் அவனது திவ்வியகுணங்களைக்கேட்கவும், தலைவணங்கவும் கூணலாம். யாம விக்கிரகத்தை நோக்குங்கால் மனதே பரம்பொருளிடம் செல்லுகிறது. சரீரமில்லாத அப்பரமனுக்குச்சரீரமேற்படுத்தல், சிலர் ஓர் குற்றமெனக்கருதுகிறார்கள். அமிசுவிப்பினும் வியப்பே. அவர் சரீரியல்லவென்றுரைத்தவர் யாவர்? அவனுக்குலகெலாஞ்சரீரம்; பின்னை வேதம் 'அசரீரி, என்றுரைத்ததேயெனில், அந்தோ! ''அசரீரி,, என்றால் முற்றிலும் சரீரமற்றவனெனப்பொருளன்று; அவனுக்கென ஓர் விசேஷசரீரத்தை என்றுமொரேமாதிரியாகக்கொண்டவனல்லன் என்பதன்றோ அதன் கருத்து. ஆதலினாற்றான் அவர் தமது தொண்டர்களின் பாவனைக்கேற்ற திருக்கோலங்கொள்வானென்பது உயர்ந்தோருட்கருத்து. எங்கும் வியாபித்துக்கருணைக்கடலாய் நிற்கும் அப்பரமன் பிரதிமையின்கண் எமக்கேன் எழுந்தருளான? எங்கும் நிறைந்த அவனது திருமேனி ஓர் விக்கிரகத்தற்கண்ணுருவழி எம்மனதிற் கெட்டுவதெங்ஙனம்? அவன் உண்மையில கருணைவள்ளலாதலால் அருபனுகினின்றே எமக்கருள புரியானோ? எனில் அவ்விதமவன் செய்யத்தடையாதுமிலது. எமது சற்றறிவுமட்டில் அவனது படர்பரஞ்சுடர்த்திருமேனியைத்தியானிப்பது கடினம். ஆதலாற்றான் முன்னோர்கள் அறிவிற்சிறந்தவராயினும் அவ்விக்கிரகாராதனத்தைவிட்டாகளில்லை. இக்காலத்தவராய எம்மவர்க்கு இப்பிம்பாராதனமன்றி வேறுகதி ஒன்றுமில்லை. அதுகொண்டே முற்காலத்தும கர்ஷிகள் எல்லாவருணத்தவர்களுக்கும் கிரமக்கிரமமாய் பகவத்பூஜை பகவத்சேவைகளை முறையே அமைத்துவந்தார்கள். சங்கர் சண்டாளர் முதலியவரும் விக்கிரகங்களைக்கண்டு கதிபெறவேண்டி அப்பிம்பங்களுக்குவீதிப்பிரதக்ஷிணத்திருக்கோலமும் நடைபெறுத்தினார்கள். மேலும் கடவுளிடம் அதிகப்பற்றில்லாதவனும், எவ்விதத்திலேனும் மனதைத்திருப்பிக் கடவுளை வழிபடவேண்டி அவ்வத்துவின் உபசாரத்தால் கீதம் முதலியவைகளையும அமைத்தார்கள். சிலர் பாட்டு முதலியவற்றில் உள்ள ஆவலாலும கோவிலுக்குச் செல்லுகின்றார்கள். இவ்விதம்வேறுகாரணத்தால் ஆலயத்திற்புகுந்தவனும்,மற்றைய மகாபாகவதர்களைப்போல அப்பரமனது பிம்பத்தை வந்தனம் முதலியவைகளால் உபசரிப்பான். இனி அவ்விதஞ்செய்து மறுபிறப்பிலேனும் மகாபக்தனாக வருவான். இவ்வித சங்கதிகளை எடுத்துக்காட்டும் கதைகள் புராணங்களுள் பலவுள. அவைகளை இங்கு விரிவஞ்சி விடுத்தோம். இதனாற்றானித்தேசத்தில் முன்னவதரித்த பரமாசாரியர்கள் தாம் எக்காலமும் பரம்பொருளை மனதில் தியானஞ்செய்ய வல்லவரேனும், பிம்பத்திற்றானே ஆராதித்தேவந்தார்கள். பாருமின்! ''ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியஸ்வாமிகள் ஸ்ரீசந்திரமௌளீசுவரலிங்கத்தையும், சாளவதி நரசிம்ம,, முதலியவற்றையும் பூஜித்துவந்தார்கள். அங்ஙனமே ''ஸ்ரீவேதாந்ததேசிகரும் ஹயக்கிரீவனை,, ஆராதித்துவந்தார். நிற்க. இக்காலமோ! யாகம், தவமுதலியவற்றிற்கு முற்றிலுமசாத்தியம். இக்காலத்திலுங்கூட சிலர் புகழ்பெறும்பொருட்டே கடன்வாங்கியாவது யாகஞ்செய்து, பிறகு அக்கடனை மீட்கும்பொருட்டு பெறக்கூடாத தானங்களை எல்லாம் வாங்கிக்கொண்டுகஷ்டப்படுகிறார்கள். மற்றுஞ்சிலரோ! காஷ்

[illegible]

யத்தைத் தரித்துக்கொண்டும் எங்குந்திரிந்து டம்பாசையே மேற்கொண்டு "யாமிதுகாறுமலையின்கணிருந்தோம்; அங்கு அகத்தியரைக்கண்டோம்; அவர் எமமைச்சூழ்ந்துகாலத்திலுள்ளவருடன் கலந்து அவர்களுக்குண்மையைப்போதிக்க அனுப்பினார்; அவரது கட்டளைப்படி யாமிங்குவந்து சிலகாலமாயிற்று,, என்றநெற்றடக்கத்தின் சிலபொய் வார்த்தைகளையொழிந்து வீண்காலம் கழிக்கின்றார்கள். ஐய! இக்காலத்தில் மந்திரமந்திரார்த்தங்களையறிந்து பரம சத்தியுடன் யாகம் செய்பவரும் பகாவிருத்திபெற்று சந்நியாசம்பெற்று வருவோரும் உண்டு. அவர்களைக் குறித்தல்ல யாமெழுதியது; இது போது செந்தமிழ்நாட்டில் யாம் மகான்களிடம் பிழைகூறுவதாக எண்ணக்கூடாது. இதுவுமன்றிச்; நண்பர்களே! தற்காலத்தவர் வீண்பகடிசெய்வார்கள்; அதைக்கண்டு மயங்காதீர்கள்; எமக்கு இவ் விக்கிரகாராதனமே மிகச்சிறந்தது. அதுமாண்டே பொதுக்கல்லியமகரிஷி சொல்லுகின்றார்: "[illegible]" பக்தியாதத்தம் பலம்பத்ரம் புஷ்பம் தூர்வாங்குரஞ் சலம் அஸ்ராத்ப்ராதிக்ரஹ்ணாதி பக்திக்ராஹ்யோஹிகேசவ:" என்று (இதன்பொருள்: "பக்தியுடன் கொடுத்தது பழமேனும் இலையேனும் புல்லேனும் மற்றதேனும். அதை அக்கேசவன் கைக்கொள்வான்" என்பது.) அங்ஙனமே கீதாசாஸ்திரத்திலும் "[illegible]" பத்ரம் புஷ்பம் பலம்தோயம் யோமே பக்த்யாப்ரயச்சதி ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்னாமிப்ரயதாத்மன:" இருக்கின்றது (இதன்பொருளும் முன் செய்யுட்போலவே கொள்க.) இனி ஹாரீதமகரிஷி பூஜைசெய்யாதவனுக்கு குறைவங்கூறினார். அவ்விதம் சந்திரிகை என்னுங்கிரந்தம் வைவேசுதியமுட்கோடலைப் புகழ்கின்றது. இங்ஙனமிருக்க, இக்காலத்துள்ள சிலதனவான்கள் எவ்விதமாயினும் பணம்சம்பாதித்தலே எமக்குமேலானவேலை என்றுகொண்டு அச்செல்வம் பெறாத அறிஞர்களை அவமதிக்கின்றார்கள். இவர்களுக்குப் புத்திகுறைவென்கிறார்கள். வடமொழிப்பயிற்சிபெற்ற எம் பண்டிதர்களைச் சிறிதும் கவனிக்கின்றார்களில்லை. பெரியோர்கொண்ட நல்லொழுக்கங்களையேனும் கைப்பிடியார். இனி பிம்பாராதனையை விட்டவர் எத்தொழிலைக்கொள்வாரென்று ஆராய்வோம். யோகிகளாவார்களா? தவம்புரிவார்களா? கன்மாநுஷ்டானம் செய்வார்களா? விரத்தியால்தானஞ் செய்வார்களா? ஒன்றுமில்லையே! இவ்விதமுள்ள எமக்கு இதுபோன்ற வேறெந்த வைதிக கருமமும் சிறந்ததல்ல. நிற்க; யாம்விக்கிரகாராதனத்தைப்பற்றி இரண்டுமாசகாலமாய் எழுதுகிறோம்; இவ்விஷயத்தைப்பற்றி அநுகூலமாகவேனும் பிரதிகூலமாகவேனும் இப்பத்திரிகாநண்பர்களாவது மற்றெவராவது எழுதவில்லை. ஆரியசமாஜத்தார் இதைக் கண்டார்களில்லைபோலும். அவர்கள் இதுவரையிலும் யாதும் விடையளித்தார்களில்லை. ஒருசமயம் இது சமாதானம் அளிக்கத்தக்கதல்லவென்று எண்ணினார்களோ! ஏதோ அறியேம்; எவ்விதமாயினும் ஆகுக. இனியாவது இ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] (London, oxford, Calcutta, Madras) [illegible]

[illegible]

துவிஷயத்தில் ஆக்ஷேபங்களைக் களைவரேல் அது விஷயத்தில் யாம் அறிந்தமட்டில் சமாதான மளிப்போம். “குற்றங்களுளதேல் அவைகளைப் பொருத்தருளவேண்டும்” என்று வித்துவான்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். தயையுள்ள வித்துவான்கள் இவற்றைக் கவனித்து உண்மையை வெளியிட்டருள்வார்களாக. சுபம்.

மொழிபெயர்ப்பு
இலத்தூர்
சுந்தரராஜசாஸ்திரி.

சரித்திரப்பயிற்சி

பௌத்தமதம்
(தொடர்பு)

அக்காலத்தில் காசிப்பட்டணமானது, அயல்தேசங்களுடன் இருப்புப்பாதைகளாலும், தந்தித்தபாலாலும், தபாற்சாலைகளாலும் சேர்க்கப்படாமலிருந்தது. அவ்விடத்திற்கு யாத்திரை செய்வது வெகு அபாயங்களோடு கூடியதாயும் மிகப்பட்ணச்சிலவுடன் செய்யக்கூடியதாயும் இருந்தது. இவ்வளவு இடையூறுகளிருந்தும் சுரநீரில் ஆழவும், விசுவேசனைத் தரிசிக்கவும், வித்தையைப் பயிலவும், ஆவலுள்ளோர்களால் அடிக்கடி கூடப்பட்டதாயிருந்தது. அவ்விடத்தில் சீனர், பாரசீகர் முதலிய அயல்தேசத்தவர்கள் சம்வாதம்செய்யவும், வேடிக்கைப் பார்க்கவும் விசேஷமாய்வருவார்கள். அவ்விடத்தில் நம்மதத்தை நிலைநாட்டத்தோன்றினவர்போன்ற அநேக பண்டிதமணிகளும், உயர்ந்தபடிப்பைப் பயில தாகமுள்ள சிஷ்யர்களும், இளையவனிடத்தில் அரசாட்சியை ஒப்பிவித்துவிட்டு தபசுபுரிய எண்ணமுள்ள வயதுமுதிர்ந்த அரசர்களும், இனிமேல் பட்டமடையவேண்டிய ராஜகுமாரர்களும், அவ்விடத்தில் குடிகொண்டார்கள். இக்காலத்தில் லண்டன், ஆக்ஸ்போர்ட், கல்கத்தா, சென்னைமுதலிய இடங்களில் யுனிவர்ஸிடி இருப்பதுபோல இவ்விடத்திலும் ஓர் பெரிய சர்வகலாசாலை இருந்தது. இப்பாடசாலைக்குப் படித்தல் படிப்பித்தல் முதலிய காரியங்களுக்கு வெகுவாய்ப்பணம் கூலவழித்துஇத்தேசத்து அரசர்கள் அநேக கலைகளில்தேர்ந்த பண்டிதர்களை ஆசிரியர்களாய் நியமித்தார்கள். உயர்ந்தகிரந்தங்களைப் பயில ஆவலுள்ள சிறியோர்கள் அன்னதானம்செய்தும், பணச்சிலவு செய்தும், வஸ்திரங்கள் கொடுத்தும், வைத்தியசாலைகள் கட்டுவித்தும் வரவழைக்கப்பட்டு சிஷ்யர்களாய் ஒப்புக்கொள்ளப்பட்டார்கள். அவ்விடத்திலேயே கூர்மையானபுத்தித்திறமையுள்ள பெரியோர்களால் வருடக்கணக்காய் மதம், வித்தைமுதலான விஷயங்களில் அநேகம் சம்வாதங்கள் செய்யப்பட்டன.

(வரும்).

வினா

"உறவும்பொருளு மொண்போகமுங் கல்விடங் கல்வியுற்ற
துறவுந் துறவிப்பயனு மெனக்குச் சுழிந்தபனற்
புறவும் பொழிலும் பொழில்சூழ்டொது புந் ததும்புவண்டி
னறவும்பொழிலெழிற் காழியர்கோன் திருநாமங்களே"

அவையேற, நவையாற, சுவைமூறச்சற்ற கவிவாணர்காள்!!! நாளது ௵ வைகாசிமீ ௨௨ உ பிரசுரமான கு_ந்தைமித்திரன்வாயிலாக யான் வினவிய அடியிற்கண்ட கேள்விகளுக்கு இதுகாறும் விடையளிப்பாரின்மையல், என தற்மதியிற்குடிகொண்ட சந்தேகமகற்றுவான்கருதி ஞானாகாரமான இப்பத்திரிகையின்கண் தோன்றினேனாதலால் கருணைகூர்ந்து அடியிற்கண்ட வினாக்கட்குத் தகுந்தவியாயங்களுடன் விடையளிக்க வேண்டுகின்றனன்.

(க) கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் கந்தபுராணம் (சங்கரசங்கிதை) திருவாய்மலர்ந்தருளிய காலத்தில் கம்பநாட்டாழ்வார் பிரஸ்தாபமுண்டா?

(௨) அம்பிகாபதிக்குத் தந்தையாகிய ஷை கம்பநாட்டாழ்வார் சைவநூல் யாதேனும் பாடியதுண்டா?

(௩) நமது மூதாட்டியாகிய ஔவையாருடன் புகழேந்திப்புலவர் ஏதோசில சம்பாஷணம் செய்ததாகச் சொல்லுகிறார்களே அதென்ன? அவர்களது காலம் சமகாலமா?

[௪] திருவண்ணாமலையில் சிவயோகியா யெழுந்தருளியிருந்த அருணகிரிசுவாமிகளுக்கும், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆழ்வாருக்கும் சில சம்வாதம் நடந்ததாகவும், அதிலொருவர் ஜெயித்ததாகவும் சொல்லுகிறார்களே; அதனதுண்மையென்ன?

[௫] ஆசுகவிச்சிங்கமாகிய காளமேகப்புலவர் அவர்கள் திருவானைக்காச் சிவபெருமானந்தாதி, அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், சித்திரமடல் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறதாகப் பிரஸ்தாபம்; அந்நூலைப் பார்வையிட்டவர்களுண்டா?

[௬] ஆன்மாக்களிடத்துள்ள சகஜமலத்தை நீக்கி மூன்றடைப்பட்டிருந்த பேரறிவு பெறுந்தொழிலாகிய சிவதத்துவத்தை அதிஷ்டித்தருளாநின்ற உலகமாதாவாகிய உமாதேவியார் பேரன்போடு, தமது ஞானாமிர்தமான திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து சிவஞானத்தைக்குழைத்தூட்டத் தெவிட்டாதுண்டு, ஸனகாதிகளுக்கு மெட்டாத சுத்த ஸத்துவசத்திய நிர்மலசிவஞானத்துடன் ஸம்பந்தப்பட்டவராகி, அதினால் "ஞானசம்பந்தர்" எனத் திருநாமங்கொண்டு விளங்கி, ஒரு ராஜகுமாரத்திக்குண்டான குமரசண்டவலியைத் தேவாரமோதித் தீர்த்தருளியும், அரவங்கடித்திறந்த செட்டிப்பிள்ளையை உயிருடனெழுப்பியும், கொங்குதேசத்தில் வருவதுந் தோன்றுவதுமாகிய சுரத்தை நாட்டைவிட்டோட்டியும், திருவாலவாயில் குப்ஜபாண்டியனுக்கு நெடுங்காலமாய்த் தீராமலிருந்த சுரரோகத்தை விபூதியினால் போக்கடித்தும், அந்தி அர்ச்சனுக்கிருந்த கூனை நிமிரச்செய்தும், வைகையாற்றில் ஏடகைத்தானே செல்லும்படி செய்தும், ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியும், அஸ்தியைப் பேரழகுடைய ஓர் அணங்காகும்படி செய்தும், ஸத்திய ஞானத்திருமொழியினால் எல்லாவிதவேதாகமத்துட் சிறந்த தாற்பரியார்த்தங்களை யெல்லாம் உலகுய்யத் தேவாரத்திருப் பிரபந்தத்தால் வெளியிட்டும், திருநல்லூர்ப் பெருமணத்தில் சுத்த சோதிவடிவாய் நிறைந்த ஞானப் பரஞ்சுடரைக் கலந்தருளியவருமாகிய "ஆளுடையபிள்ளையாரை" வைணவசமயத்து ஆழ்வார் பதின்மர்களில் ஒருவரான திருமங்கையாழ்வார் வாதுக் கழைத்ததாகவும் விசேஷவாதங்கள் நடந்ததாகவும், அதிலொருவர் ஜெயமடைந்ததாகவும் பிரஸ்தாபம்; அதனதுண்மையென்ன?

[௭] அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் பெரியபுராணத்தில் நாமதேயங்கள் சொல்லப்பட்டதுபோல வடமொழியில் அந் நாயன்மார்களுக்கு ஏற்பட்டிருக்கும் நாமதேயங்கள் [பெயர்கள்] எவை?

[௮] அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் வடமொழியிற் புராணங்களிருப்பதுபோல, வைணவ சமயாசாரியர்களாகிய ஸ்ரீநம்மாழ்வார் முதலான பதின்மர்களுக்கும் புராணங்களுண்டோ? அவை எவை?

[௯] வைணவசமயாசாரிய சிரோரத்னமான ஸ்ரீமத் வேதாந்ததேசிகரும், பாஷ்யப்பிரவர்த்தகரான ஸ்ரீ ராமாநுஜஸ்வாமிகளும், ஆழ்வார் பதின்மர்களது திருவாய்மொழிப்பிரபந்தத்தைப் புகழ்ந்து பிரசாரப்படுத்தினதுபோல, சைவசமயாசாரிய சிரோரத்னங்களான ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகளும், இராஜயோகீ ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதசரணரும், பாஷ்யப்பிரவர்த்தகர்களாகிய ஸ்ரீ கண்டதேசிகேந்திர சுவாமிகளும், ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளும் "திருவாசகம்", "தேவாரப்பிரபந்தம்", இவைகளைப் புகழ்ந்து பிரசாரப்படுத்தியிருக்கிறார்களா? திராவிடத்தில் மேற்கண்ட தீக்ஷித சங்கரசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியதாயுள்ள நூல் யாதேனும் உண்டா?

[௰] திருவாய்மொழிப் பிரபந்தத்துக்கு வித்வான்களாகிய பெரியவாச்சான் பிள்ளை முதலாகிய புலவர்களால் ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி யென்று விசேஷவியாக்கியானங்கள் ஏற்பட்டதுபோல, திருவாசகம், தேவாரப்பிரபந்தம் இதுகளுக்கு யாரேனும் வித்வான்கள் வியாக்கியானஞ்செய்திருக்கிறார்களா?

[௰க] ஸ்ரீமத் ராஜயோகீ ஸ்ரீமதப்பையதீக்ஷிதசரணர் எவ்வளவநூல்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள்; அந்நூல்கள் எவை?

[௰௨] சோதிச்சுடரொளி ஆதித்தனிப்பொருளாகிய ஆதிபாண்டரங்கன் அயன்சிரத்தையும், அஸ்திமாலைகளையும், அரவாபரணங்களையும், அதளாடையையும், அம்புலியையும், அனலையும், புனலையும், சடையையும், விபூதியையும் தரித்தருளிய காரணம்யாது? மணிமிடற்றிறை சுடலையில் நடனம்செய்தருளியதென்னை?

[13] பாஷ்யப்பிரவர்த்தகர்களான ஸ்ரீகண்டதேசிகேந்திரஸ்வாமிகளுக்கும் பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீமச்சங்கராசாரியஸ்வாமிகளுக்கும் உத்திமீமாம்ஸாஸூத்திரவிஷயத்தில் சில

ஸம்வாதமடங்கியதாக "சுவாதிக்கியாரத்திஞவளி,, ஸித்தாந்த ரத்நாகரம் முதலியநூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. அது ஸமஞ்சஸமாயிருக்கின்றதா? அவர்களது வாழ்ந்த ஸமகாலமா?

[14] பரமேசுவரனது அடியார்களாகிய சுண்டோதரன், பாணிபத்திரன், பாணன்முதலானவர்களும், மற்றும் அவ்விறைவனது பூதகணங்களும் விருந்தர்களாயிருப்பதற்குக் காரணமியாது?

15 சாரதாபீடமாகிய வித்தியாரண்ய யோகீந்திரஸ்வாமிகளும், வைஷ்ணவசமய சித்தாந்தத்துக்கு ஒரு மகாமேருவைப்போலவிளங்கின வேதாந்ததேசிகரும், ஸமகாலவித்வான்களென்றும், சிலகாலம் அதிகசட்பாயிருந்து ஒரே ஆசாரியனிடத்தில் கல்விகற்றப்பிறகு மதவாதத்தால் வேறுபட்டார்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதனது உண்மை என்ன? அவர்கள் சமகாலவித்வான்களா?

[16] ஸ்கந்த மகாபுராணத்தில் வேதஸாரமாகிய ஸூதஸம்ஹிதைக்கு ஸ்ரீமத் வித்யாரண்ய யோகீந்திரர், ஸ்ரீமத் சதாசிவப்பிரமம், ஸ்ரீமாதவாசாரியார்முதலான மகான்கள் அறுவர்களினால் தனித்தனி வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதில் இருவர்செய்த வியாக்கியானமே பிரபலமென்றும் கேள்வி. ஸ்ரீமத் வித்யாரண்யர் செய்தருளிய வியாக்கியானம் அச்சடப்பட்டிருக்கின்றதா?

[17] பதினெண் புராணங்களில் இலிங்கம், கூர்மம், மத்ஸியம், ஸ்காந்தம், பாகவதம் முதலிய புராணங்கள் மட்டும் வடமொழியிலிருந்து கவிகுல சிகாமணிகுலசேகரபாண்டியர், அதிவீரராமபாண்டியர், வரதுங்கராமபாண்டியர் ராஜயோகி கச்சியப்ப சிவாசாரியஸ்வாமிகள் ஆரியப்புலவர் முதலானமகான்களினால் தென்மொழியில் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. அவைபோல் மற்றைய சிவபுராணம், வாமநபுராணம், பாத்மபுராணம், வராகபுராணம் முதலானதுகளை எந்தமகானுபாவர்களாவது திராவிடத்திற்செய்திருக்கிறார்களா?

[18] அகல்யா, திரௌபதி, ஸீதா, தாரா, மண்டோதரியென்ற பஞ்சகன்னிகைகளை ஸ்மரணம் செய்கிறவர்களுக்கு மகாபாதகங்கள் நிவர்த்தியாகுமென்றும், பிரதிதினமும் காலையில் ஸ்மரிக்கவேண்டுமென்றும் புராணங்கள் கூறுகிறதாக பெரியோர்கள் மொழிகிறார்கள். மேற்கண்ட பஞ்சகன்னிகைகளைப்போல கற்பிலும், பொறுப்பிலும், அறத்திலும், திறத்திலும், அருளிலும், பொருளிலும், பத்தியிலும், சித்தியிலும், சிறந்தவர்களாகிய அக்கினியை ஜலமாகச்செய்தவளும், ஜகன்மாதாவான உமாதேவியாருடைய ஆலிங்கனத்தைப் பெற்றவளுமாகிய "சந்திரமதி" யென்ற அணங்கரசும், வனசரனைக்கண்ணால் நீற்றவளாகிய "தமயந்தி,, யென்ற பெண்மணியும், ஆணைப்பெண்ணாகவும், பெண்ணையாணாகவும் செய்த "ஸீமந்தினி,, யென்ற தெய்வத்திருமகளும் [நளன் மகனது மருமகள்] படைப்பு, காப்பு, அழிப்பென்ற முத்தொழிலையும் நடாத்தும் முத்தேவர்களையும் சிசுக்களாகச்செய்த அநசூயாதேவியும், கதிரவனை உதிக்காமற்செய்த நளன்மகளாகிய நாளாயணியென்ற நாரியர்க்குபர்விதியும், மணலைக் குடமாக்கி நீர்மொண்டுவந்த ஸ்ரீரேணுகாதேவியும், மற்றுமுள்ள அநேகம் உத்தமஸ்திரீகளுமிருக்க மேற்கண்ட பஞ்சகன்னிகைகளைமட்டிலும் குறிப்பிட்டு ஸ்மரிக்கும்வண்ணம் விதித்தகாரணம் யாது?

[௧௯] மகாத்மாவாகிய ஜயதேவமகாகவி வடமொழியில் அருளிச்செய்த பிரஸன்னராகவம்என்னும் நூலைத் தென்மொழியில் மொழிபெயர்த்த கவித்தலம் ம-௱-௱-ஸ்ரீ துரைசாமிமூப்பனாரவர்கள் ஆஞ்சனேயரை ஸ்ரீ சிவபெருமானுடைய அம்சமென்று அம்மொழிபெயர்ப்பில் கூறியிருக்கிறார்; அதற்கு வடமொழியிலாவது, திருவாய்மொழியிலாவது ஆதாரமுண்டா?

[௨௰] அறுபத்துமூன்று நாயன்மார்களி லொருவராகியும் ஆலவாயில் மாறாட்டம்செய்த மாதேவனுடன் கவியிற்போராட்டங்கண்ட புலவர்பெருமானாகியுமிராநின்ற நக்கீரதேவருக்கு இலக்கண இலக்கியங்களை உபதேசித்தருளியவரும், வடகலையையும் தென்கலையையும் கலைபிறந்த கருங்கடலையுமுண்டருளியவருமான ஸ்ரீபகவான் கும்பமுனி [அகஸ்தியர்] திருவாய்மலர்ந்தருளியதாக அநேகம் வைத்தியசாஸ்திரங்கள் அச்சடப்பட்டிருக்கின்றன. அந்நூல்களுள் அநேகமாக "ஆமப்பா வல்புவியிலரத்தை சுக்கும்,காமப்பா காரமுள்ள கடுந்தேனும், நாமப்பா வேலைகொஞ்ச முள்ளேகொள்ளப், போமப்பா வுள்ளபசி வெள்ளத்தானே,, யென்றும், ஆச்சப்பா ரகசியத்தை யறையக்கேளு வாச்சப்பா வகையுடனே வாகைவித்தும், காச்சப்பா கற்கடகசிங்கிகாயம, பூச்சப்பா மேகநோய்கள் புழுங்கிப்போமே,, யென்றும் சாதாரணமாய் கேவலம் பாலர்கள் சொன்னதுபோல் சொல்லப்பட்டிருக்கின்றன. மதுரங்கதித்த பைந்தேன் மடைதிறந்ததுபோல கம்பீரமாக அம்மகானது திருவாக்கிருக்கவேண்டுமேயல்லது சாதாரணமாயிருக்குந்தரத்ததோ!! மாநிலத்துமாக்கள் கேவலம் மடையர்களெனக்கருதி யெவருமறியும்வண்ணம், பால்வண்ணனடிமறவாப்பரமயோகி, அன்பின்பெருக்கால் சாதாரணமாகத் திருவாய்மலர்ந்தருளியதோ!! தெரியவில்லை; அல்லது சாதாரணமா யுள்ளவர்கள் பாடித்தமதுபேரைக்காட்டினால் நூல் அவையேறாதென்பதுபற்றி "அம்முனி யாசரது,, திருநாமத்தைச் சூட்டினார்களோ அறியோம்; இதனுண்மையாது?

[௨௧] அறுபத்துமூன்று நாயன்மார்களுடையதிவ்யசரித்திரங்களை வெளியிடாநின்ற சிவபக்தமகாத்மியம், உபமன்னியுபக்தவிலாஸம், அகஸ்தியபக்தவிலாஸம் என்கின்ற கீர்வாணப்பிரபந்தங்கள் பதினெண் புராணங்களுள் எந்த புராணங்களைச் சேர்ந்தது? அல்லது எந்த உபபுராணங்களைச்சேர்ந்தது? தவிர, மற்றைய அதிரகஸ்யமான ஒன்பதுவினாக்களையும் அடுத்தபத்திரிகைக்கு அனுப்ப சித்தமாயிருக்கின்றனன். வந்தனம்.

இற்றை நாணமஞரிடர்தீர்த்திடும்
அற்றை நாள்வினை யாவுமகற்றிடும்
பற்றை நீக்கிப் பாசுகம்பாலிக்குங்
கற்றை வார்சடையான் பொற்கழல்களே.

இங்ஙனம்
சிவபக்தபதாம்போஜபரமாணு

ஒரு நிருபநேச ரெழுதுகிறார்.

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

ப்ரமமவித்தியா பத்திராதிபதி முன்னர் வசிக்க வலியிலாஞயினும் "நிலத்தியல்பாய் நீர்திரிந்தற்றாகு மாந்தர்க்கு, இனத்தியல்பதாகு மறிவு,, என்பதுபோல ஷை பத்திரிகையானது எனக்குண்டாகிய துணிவினால் சில முக்கிய வசனங்களை எடுத்துப்பசபோதமமைத்து எதிரில்கொண்டுவந்து நிறுத்திவிட்டபின்னா நான மௌனமாயிருக்கககூடவில்லை. இந்த பத்திரிகாசிரோமணி ஜனனமாய் மூன்றுமட்டருவ யாரம்பிக்கு முனனரே விளையும்பயிர் முளையிலே என தனம்பருக் கிசைந்தபெருமையையும் புகழையும் பெற்று நாளுக்குநாள விர்த்தியடைகின்றான்; அவள்மீது எனககுண்டாகிய அன்பின்மிகுதியால என்னுலியன்ற சில சொலலணிகளைப்புனைந்து மூட்டிப்பார்க்கும்பெருமையளிக்க பத்திராதிபர்க்கு வந்தனம பலதரமும் தந்தனன். "ஸர்வேஷாமேவ வித்தானாம் ஜ்ஞானம் வித்தம் ஸுகம்" என்றபடிக்கும், "ஜ்ஞானம் வேதாந்தவிஜ்ஞானம் ஜ்ஞாதவ்யம் ஸர்வதா நரை:" என்றதினாலும் "அறிவுடையாரெல்லாமுடையார் அஃதில்லார் என்னுடையரேனுமிலர்" என்னும் திருக்குறண்மொழியாலும் "அறிவுநூல்கல்லாதுலகுநூலோதுவதெல்லாம் கலாம்,, என்பதினாலும் வாக்யவ்ருந்தவிஸ்ஸ ஜ்ஞானம் விநா ப்ரக்ஞா நஸித்யதி என்றிருப்பதாலும் அவ்வறிவையடைய ப்ரம்மவித்தியாபத்திரிகை முக்கிய உதவியாகயிருக்கின்றது. இப்படிக்கிருப்பதால் இப்பத்திரிகைவாயிலாக சமஸ்கிருதபாஷாஞானமில்லாத யாவரும் ப்ரம்மஞ்ஞானிகளாகவழிகாட்ட ஒருஉபாயத்தை ப்ரம்மசுவரூபியான பகவான் என்மனதில் தோனறச்செய்ததை இதனால் பத்திராதிடருக்குஅறிவிக்கலாயினேன். எனது பிரியமுள்ளஐயா,—

ப்ரம்மவித்தியாபத்திரிகைக்கு முதல் இரண்டுபாரங்கள் ப்ரம்மவித்தையைப்பற்றியேஇருக்கவேண்டும். ஞானவாசிஷ்டாசாரத்தில் (ஸாரமேததநு ஸம்பூர்ண ஜ்ஞாநவிஜ்ஞாநகோஸம்) என்றபடிப்ரம்மவித்தியாமகாசமுத்திரமென்றிருப்பதால் ப்ரம்மவித்தைஎன்கிற பெயரைச்சூட்டினதினால்மாத்திரம் போராது. அதை அன்வர்த்தநாமாவாகவேசெய்யவேண்டும். ப்ரம்மவித்தையைப்போதிக்கும்படி யான்மட்டுங்கேட்டுக்கொண்டால்எப்படிக்கூடுமெனபீரேல், "பெறுதற்கரிய பிறப்பீதிதன்போக்கறிதற்கரிய வவதீ பிறிதொன்றை நாடுதற்குநோமுண்டோ- நன்னெஞ்சே முகதிநெறிகூடுதற்கல்லாதுகுத்து ,, என்பதினாலும் (ஜ்ஞானேந ஹீநா: பஸுபி: ஸமானா:) என்பதினாலும் சகலருக்கும் ஆவசிகமானதே. ஆதலால் முதலில் ஞானவாசிட்டாசாரமென்னும் கிரந்தத்தை சிற்சிலபாகமாக அதன்வியாக்கியானசகிதமாக எழுதி அதற்குச்சரியான தமிழ்மொழிபெயர்ப்பும் எழுதிவரவேணும். இங்கிலீஷில் 'ஷார்ட் அன்ட்ஸ்வீட்,, என்னும்பழமொழியையும்சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் என்னும் முத்தியையுமுடையதாயும் சர்வஸ்ரேஷ்டமானதாயுமிருக்கிற ஷை கிரந்தத்தைக் கருவியாகக்கொண்டு ஞானபிச்சையளிக்கப் பத்திராதிபரைப்பிரார்த்திக்கின்றனன். அப்புத்தகமாங்கு கிடைககாவிடில் யான் அனுப்பத்தயாராயிருக்கின்றனன்; இதுமுடிந்தபிறகு இன்னம் அபரிமிதமான கிரந்தங்களிருப்பதால பின விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகின்றனன்.

இங்தப்படி இஷ்டன்
காமேசுவரய்யர்
வைசகீல்
திருத்துறைப்பூண்டி

கையொப்பநண்பர்களுக்கறிவிப்பு.

யாம் பன்முறை பத்திரிகைகள், கடிதங்கள் இவைகள்வாயிலாக அறிவித்தும் சிற்சிலர் மௌனத்தைக்கைக்கொண்டு சென்றவருடங்களின் பாக்கியை யனுப்பவில்லை. அடுத்தமாதம் முதல் அவர்களுக்குத்தடையின்றி பத்திரிகை நிறுத்தப்படும். இனிமுன்பணமாகவே கட்டி பத்திரிகையைப் பெறவேண்டும்.

"ஸ்ரீவித்யாவாரிதிவிஷ்ணுஸஹஸ்ராக்ஷரமாலாபுரம்"
க்ரந்தங்கள் விக்ரயஸ்தானம்

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகர் ஸ்ரீமத்வேதாந்ததேசிக ஸ்தோத்ர வ்யாக்யானம் } ,, க ,,

ஸ்ரீமச்சங்கரபகவத்பாதவிரசித ஸௌந்தர்யலஹரீ) ஸ்ரீஹஸ்திகிரிமாஹாத்ம்யம் ஸடீகம்) ,, க ,,

ஸ்ரீமத்அப்பய்யதீக்ஷிதேந்த்ர விரசிதாஃக்ரந்தா:
ஸ்ரீ ஸிவகர்ணாம்ருதஸூக்தி: } உ ,, ,,
ஸிவதத்வவிவேக:

ஸித்தாந்தலேஸஸங்க்ரஹ: ஸித்தாந்தசந்த்ரிகா } ,, கஉ ,,

ந்யாயரக்ஷாமணி: யோகவிவரணஞ்ச } ,, அ ,,

க்ஷேத்ரஸோத்ரம் ஸ்தோத்ரத்ரயஞ்ச } ,, ரு ,,

ஸிவமஹிமகலிகாஸ்துதி: ததுபாஸ்யதாஸ்த்ரீமதா மஹாதேவஸ்ய ஸ்ரீராமாஜ்ஞாஸ்யஸ்தவவிரசித வ்யாக்யா } ,, ௭ ,,

[illegible]	,,	௧	,,
[illegible]	,,	௨	,,
[illegible]	,,	௨	,,
[illegible]	௧	,,	,,
[illegible]	,,	௨	,,
[illegible]	,,	௧	,,
[illegible]	,,	௧	,,
[illegible]	,,	,,	௬
[illegible]	,,	,,	௬
[illegible]	,,	,,	௬
[illegible]	,,	௮	,,
[illegible]	,,	௧	,,
[illegible]	,,	௫	,,
[illegible]			
[illegible]	,,	௬	,,
[illegible]	,,	௬	,,
[illegible]	,,	௬	,,
[illegible]	,,	௧	,,
[illegible]	,,	௧	,,
[illegible]	,,	௧	௬
[illegible]	,,	௫	,,
[illegible]	,,	௧	,,
[illegible]	,,	,,	௬
[illegible]			
[illegible]	[illegible]	௬	,,
[illegible]	,,	௮	,,
[illegible]	,,	,,	௬
[illegible]	,,	௫	,,
[illegible]	,,	௮	,,
[illegible]	,,	௫	,,
[illegible]			
ble Disector (English)	0	0	6
One Hundred anb Fifty Contradictions of the Bible (English)	0	1	0

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் தமிழ்புத்தக

விளம்பரம்

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.
இஃது ஓர் சம்ஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணா 2.

நீக்கிர்த்தனே	௧	௬	
ஆன்மாவும் சரீரமும்	௧	,,	
இஃது சாஸதிகர் செழ்விக்கு விடை			
சன்மார்க்கபோதனி	,,	,,	௫
சீகாழித்தலபுராணம்	,,	௮	,,

CHIDAMBARAM;—Printed and Published
for the Proprietor at the Brahmavidya Press.